**செ. கு. எண்: 138** **நாள்: 16.08.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

இரங்கல் செய்தி – **16.8.2018**

முன்னாள் பாரதப் பிரதமரும், பாரதிய ஜனதா கட்சியின் முதல் தலைவரும், மூத்த அரசியல்வாதியுமான திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள் உடல் நலக்குறைவால் புதுடெல்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி, இன்று **( 16.8.2018)** காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

பாரதிய ஜனதா கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பாரதப் பிரதமர் திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் மூன்று முறை இந்தியாவின் பிரதமராக இருந்து மக்கள் பணியாற்றியவர். இவர் வெளியுறவுத் துறை அமைச்சராகவும், சுமார் ஐம்பது வருட காலம் பாராளுமன்ற உறுப்பினராக மக்களவையிலும், மாநிலங்களவையிலும் திறம்பட செயலாற்றியவர் என்ற பெருமைக்குரியவர்.

இலக்கியத்தின் மீது ஆர்வம் கொண்டவரான திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள் சிறந்த பேச்சாளராகவும் விளங்கியவர். இவர் சிறந்த ஆட்சியாளராகவும், கடின உழைப்பாளியாகவும், அனைவரிடமும் அன்பாக பழகும் தன்மையுடையவராகவும் இருந்தார்.

திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள் தன்னுடைய வாழ்வை இந்திய திருநாட்டிற்காகவே அர்ப்பணித்தவர். இந்திய அரசின் பாரத ரத்னா மற்றும் பத்ம விபூஷன் போன்ற உயரிய விருதுகளை பெற்ற பெருமைக்குரியவர்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களின் மறைவு இந்தியாவிற்கே ஒரு பேரிழப்பாகும். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், பாரதிய ஜனதா கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**